2014 டிசம்பர் 8] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும்*

ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2014), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2014) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம் மத்திய அரசால் 2013 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டு, பிப்ரவரி 20 ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு திருத்தத்தை நிறைவேற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருக்கிறது. இப்போது நம்முடைய அரசு அந்தச் சட்டத் திருத்தத்தை வாபஸ் பெறுவது என்று அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே இந்தச் சட்டம் சட்டப் பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்டபோது, இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று நாங்கள் வற்புறுத்தினோம். இருந்தாலும், அது நிறைவேற்றப்பட்டு, இப்போது அரசு அதை வாபஸ் பெறுவதாக அறிவித்திருக்கிறது. ஆனால், எனக்கு ஒன்று விளங்கவில்லை. அது என்னவென்று சொன்னால், எந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் வாபஸ் பெற்றிருக்கிறீர்களோ, அதே சட்டத்தை ஒரு எழுத்தைக்கூட மாற்றாமல், திரும்பவும் இன்றைக்கு இந்த

@ 8–12–2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2014 டிசம்பர் 8] [திரு. க. பாலகிருஷ்ணன்]
அவையில் முன்மொழிந்து நிறைவேற்றுவது, என்ன நோக்கத்திற்காக என்பது எங்களுக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில திருத்தங்களோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. க. பாலகிருஷ்ணன்: ஆகவே, நாங்கள் இந்தச் சட்டமுன்வடிவு குறித்து கூறுவது என்னவென்றால், குறைந்தபட்சம் தொழில்களுக்காக, தொழிற்சாலைகளை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தில் நிலங்களைக் கையகப்படுத்துகின்ற சட்டத்தை, மத்திய அரசினுடைய நிலம் கையகப்படுத்துகின்ற சட்டத்தினுடைய எல்லையிலிருந்து விடுவிக்கிற, அந்தச் சட்டம் இதற்குப் பொருந்தாது என்று சொல்கின்ற அந்த விதியையாவது நீக்க வேண்டும். அதை நீக்கிவிட்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால்கூட பரவாயில்லை. அதை நீக்கவில்லை என்று சொன்னால், குறைந்தபட்சம் இந்தச் சட்டமுன்வடிவை நிலைக் குழுவிற்காவது அனுப்பி ஒரு முழுமையான பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு 1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டம் உட்பட 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர்கள் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம், 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம் ஆகிய 3 தமிழ்நாடு சட்டங்களின்படி தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வந்தன. பிறகு, 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீட்டிற்கும், ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம், மைய அரசின் சட்டம் 30/2013, 1-1-2014-ல் அமல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 1894 ஆம்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 டிசம்பர் 8

ஆண்டைய நில எடுப்புச் சட்டம் நீக்கரவு செய்யப்பட்டது. ஆனால், புதிய நில எடுப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகும், மேற்படி 3 தமிழ்நாடு சட்டங்களின்படி தொடர்ந்து நிலம் கையகப்படுத்தும்பொருட்டு, மத்திய அரசின் சட்டம் 30/2013-ன் வகைமுறைகளில், மேற்சொன்ன 3 தமிழ்நாடு சட்டங்களின்படி நிலம் கையகப்படுத்தும் நேர்வுகளுக்கு சரியீடு தீர்மானிப்பதற்காகப் பொருத்தம் செய்யும்பொருட்டும், 2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை தமிழ்நாடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014, 20-2-2014 அன்று கொண்டுவரப்பட்டது.

இன்று, இந்தச் சட்டமுன்வடிவு திருத்தங்கள் ஏதும் இல்லாமல் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு அவசரகால நிலம் எடுப்பதையும், பொதுவான நோக்கங்களுக்காக நிலம் எடுப்பதையும், பல்வேறு காரணங்களுக்காகவும் மத்திய அரசு முழு அதிகாரத்தையும் வைத்திருக்கிறது. மத்திய அரசு கூட்டிய அனைத்து மாநில முதலமைச்சர்கள் ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று நான் உட்பட, துறையினுடைய செயலாளர்கள் எல்லாம் அங்கே சென்று, தமிழ்நாட்டினுடைய நிலைமையையும், மைய அரசு ஒட்டுமொத்தமாக அதிகாரத்தை குவித்து வைத்திருக்கிறது. நில எடுப்பு என்பது தனியாருடைய நலனுக்காக அல்ல, இது ஒட்டுமொத்த சமுதாயத்தினுடைய உள்கட்டமைப்பினுடைய வளர்ச்சிக்காக நிலம் எடுக்கப்படுகிறது. ஆகவே, இதில் தமிழ்நாடு அரசுக்கும் அதிகார பகிர்வு இருக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, முதலில் compensation உடனடியாக அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்ட உடனே compensation கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது Rehabilitation and Resettlement போன்றவற்றைக் கூடுதலாக மக்களுக்கு வழங்குவதற்காகத்தான் இந்தத் திருத்தப் பிரிவு. இது மக்களுடைய நலனுக்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 3 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 3 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2014), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு